உள்ளாட்சி தேர்தலுக்குள் தவெகவின் இமேஜை உடைக்க திமுக திட்டம்



சென்னை, செப்.10: உள்ளாட்சி தேர்தலுக்குள் தவெகவின் இமேஜை உடைத்து 95 சதவீத இடங்களுக்கு மேலான வெற்றியை பெற திமுக அதிரடி வியூகங்களை வகுத்து வருகிறது.

தமிழகத்தில் நடந்து முடிந்த சட்டப் பேரவை தேர்தலில் தவெக 108 இடங்களை மட்டுமே பிடித்தது. தனிப் பெரும்பான்மை கிடைக்காத தால் திமுக கூட்டணியில் வென்ற கட்சிகளிடம் அமைச்சர் பதவி தருவதாக கூறி ஆட்சி அமைத்தது. தவெக ஆட்சி 100 நாட்களை கடந்தும் தேர்தலில் அளித்த வாக்குதிகள் மற்றும் மக்களின் எதிர்பார்ப்புகள் எதையும் நிறைவேற்ற முயற்சிக்கவில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது. மேலும் கடந்த ஆட்சியை குறை சொல்லியே காலத்தை ஓட்டுவதாக மக்களிடம் கடும் அதிருப்தி நிலவுகிறது.

இப்போது தான் ஆட்சிக்கு வந்துள்ளோம், டைம் தேவை என்று முதல்வர் விஜய் பஞ்ச் டயலாக்கில் மட்டுமே காலத்தை கடத்துவதாக விமர்சனங்கள் எழுந்துள்ள நிலையில், சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட எதற்கு டைம் என மக்கள் கேள்வி எழுப்ப தொடங்கியுள்ளனர். சட்டப் பேரவையிலும் எதிர்கட்சிகள் தவெக அரசு மீது பல குற்றச்சாட்டுகளை எழுப்பின. அதற்கு எல்லாம் பதில் சொல்லாமல் திமுக உள்ளிட்ட எதிர்கட்சிகளை விமர்சிப்பதை மட்டுமே வாடிக்கையாக கொண்டு அமைச்சர்கள் செயல்பட்டதை ஆட்சி அமைக்க ஆதரவு தந்த கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்களே கண்டித்துள்ளனர்.

அதுமட்டுமல்ல, மக்கள் நல திட்டங்களை செயல்படுத்துவதில் காட்ட வேண்டிய வேகத்தை, கடந்த கால ஆட்சிகளில் ஊழல் நடந்ததாக கூறி, அதற்கான வழக்கு பதிவுகளில் உள்ள தகவல்களை குறிப்பெடுத்து எதிர்கட்சிகளுக்கு குடைச்சல் கொடுக்கும் வேலைகளை மட்டுமே தவெக செய்து வருவதாக சமூக ஆர்வலர்களின் மத்தியில் கடும் விமர்சனங்கள் எழுந்துள்ளது.

ஆனால், நிலைமையோ தலைகீழாக உள்ளது. ''தவெக தலைவர் விஜய் தமிழகத்தின் முதல்வராகப் பொறுப்பேற்றது முதல், தவெக நிர்வாகிகளின் அராஜகங்கள் நாளுக்கு நாள் பெருகி வருகின்றன. கொலை, கொள்ளை, பாலியல் வன்கொடுமைகள், ரவுடியிசம், மாமூல் பிரச்னைகள் என ஒரு பெரிய சட்டவிரோத வலையமைப்பே தவெகவிற்குள் உருவாகிக் கொண்டிருக்கிறது. அரசு குற்றவியல் வழக்கறிஞர்களை நியமிக்க ரூ.50 லட்சம் வரை அமைச்சர் நிர்மல் குமார் லஞ்சம் கேட்பதாக பாஜ மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் குற்றம்சாட்டியதோடு ஆளுநரிடம் புகார் அளித்ததும் பரபரப்பை ஏற்படுத்தியது. இது தொடர்பாக ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்து தவெக நிர்வாகியை கட்சியை விட்டே நீக்கிவிட்டனர்.

இதேபோன்று, ''தவெக ஆட்சிக்கு வந்த பிறகு லஞ்சம், ஊழல் அதிகரித்துள்ளது. அத்தியாவசிய பொருட்கள் விலை விண்ணை முட்டும் அளவுக்கு சென்று விட்டது'' என்று அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார். இப்படி எதிர்கட்சிகள் எல்லாம் தவெக ஆட்சி மீதான அவலங்களை எடுத்து கூறிய போதும் அதன் மீது எந்தவித கவனமும் செலுத்தாமல் யார் யார் தவெக மீது எதிர்ப்புகளை பதிவு செய்கிறார்களோ அவர்கள் மீது வழக்கு பதிவு செய்வதும், அவர்களை கைது செய்வது தொடர்பான வேலைகளில் தான் தவெக அரசு கவனம் செலுத்துகிறது என்று திமுக உள்ளிட்ட எதிர்கட்சிகள் குற்றம்சாட்டி வருகின்றன.

கடந்த கால ஆட்சி மீது ஊழல் குற்றச்சாட்டுகளை கூறும் தவெக, தற்போது தவெக ஆட்சி மீது எழுந்துள்ள ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு என்ன பதில் சொல்லப் போகிறது என்ற கேள்விகள் சமூக வலைதள பதிவுகளில் விஸ்வரூபம் எடுத்து வருகிறது. மாற்றம் மாற்றம் என்று கூறி ஆட்சிக்கு வந்து விட்டு இதுதான் தவெக கொண்டு வந்த மாற்றமா என்றும் கேள்விகளை எழுப்பி வருகின்றனர். இந்த பரபரப்பான சூழ்நிலையில் இரண்டு தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்ட நிலையில், முதல் ஆளாக திமுக வேட்பாளர் பட்டியலை வெளியிட்டுள்ளது. இது ஒருபுறம் இருந்தாலும் அடுத்து வரக்கூடிய உள்ளாட்சி தேர்தல் தான் மிக முக்கியம் என்பதை திமுக உணர்ந்துள்ளது.

தற்போது மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளில் திமுகவின் வலுவான கட்டமைப்பு இன்னும் நீடிக்கிறது. இதை உடைக்க தவெக ரெடியாகி வருகிறது. இதை எதிர் கொள்ளும் வகையில், சட்டமன்ற தேர்தலில் ஆட்சியை தவற விட்டாலும், உள்ளாட்சி அமைப்புகளின் மீண்டும் வலுவான கட்டமைப்பை உருவாக்கும் வகையில், தமிழ்நாட்டில் வரவிருக்கும் உள்ளாட்சித் தேர்தலில் ஒட்டுமொத்த வெற்றியைப் பெற்று, தங்களின் பலத்தை நிரூபிக்க திமுக தீவிரமான மாஸ்டர் பிளான் போட்டு புதிய வியூகங்களை வகுத்து வருவது குறிப்பிடத்தக்கது. 2026 சட்டமன்றத் தேர்தலில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் மற்றும் புதிய சவால்களுக்குப் பிறகு, தங்களை அடிமட்ட அளவில் மீண்டும் வலுப்படுத்திக் கொள்ள இந்த உள்ளாட்சித் தேர்தலை திமுக ஒரு முக்கிய களமாகக் கருதுகிறது. இதற்காக சில முக்கிய வியூகங்களை செயல்படுத்த திட்டமிட்டுள்ளதாக திமுக நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர். அதன்படி, உள்ளாட்சித் தேர்தலில் புதிய தலைமுறை வாக்காளர்களை கவரும் வகையில், இளைஞரணி மற்றும் மாணவரணியைச் சேர்ந்த தகுதியான இளைஞர்களுக்கு அதிக அளவில் வாய்ப்பளிக்கவும் திமுக தலைமை திட்டமிட்டுள்ளது. அடிமட்ட அளவில் கட்சிப் பொறுப்புகளிலும், தேர்தல் வேட்பாளர் தேர்விலும் இளைஞர்களுக்கு முக்கியத்துவம் அளிப்பதன் மூலம் நிர்வாகத்தை இன்னும் சுறுசுறுப்பாக்க முடியும் என்றும் நம்புகின்றனர். அதன்படி, உள்ளாட்சித் தேர்தலுக்குள் தவெகவின் செல்வாக்கை உடைக்க திமுக புதிய வியூகங்களை வகுத்து வருவது தமிழக அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அதன் ஒருபகுதியாக அடிமட்ட அளவிலான டிஜிட்டல் மற்றும் களப் பிரசாரம், பூத் கமிட்டி வலுப்படுத்துதல் உள்ளிட்ட களப் பணிகளை தீவிரப்படுத்தியுள்ளனர். மேலும், தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள சுமார் 46,000க்கும் மேற்பட்ட வாட்ஸ்அப் குழுக்கள் மற்றும் சமூக ஊடக நெட்வொர்க்குகள் மூலம் திமுகவின் முந்தைய சாதனைகளையும், தற்போதைய தவெக அரசின் ஊழல் குற்றச்சாட்டுகளை பொதுமக்கள் மத்தியில் அம்பலப்படுத்தும் முயற்சிகளையும் தொடங்கியுள்ளனர்.

மக்கள் மத்தியில் பெருத்த ஏமாற்றத்தை தந்ததாக கருதக் கூடிய மகளிர் உரிமை தொகை வாக்குறுதி, பயிர் கடன் தள்ளுபடி செய்யாதது போன்ற அதிருப்திகளை மக்களிடம் கொண்டு சேர்க்கும் தீவிர டிஜிட்டல் வியூகத்தை தொடங்கியுள்ளனர். அதன் அடிப்படையில், உள்ளாட்சித் தேர்தலில் 95% இடங்களுக்கு மேல் கைப்பற்றி, தங்களுடைய பாரம்பரிய கோட்டைகளை மீண்டும் நிலைநிறுத்திக் கொள்ள திமுகவினர் தீவிரமாக களம் இறங்கியுள்ள தமிழக அரசியல் களத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தேர்தல் களத்தில் முதல்முறை

தாராபுரத்தில் திமுக வேட்பாளராக களமிறங்கும் வக்கீல் சுகன்யா யார் ?

தாராபுரம், செப். 10: தாராபுரம் தொகுதி இடைத்தேர்தலில் திமுக வேட்பாளராக வழக்கறிஞர் எம்.சுகன்யா (33) அறிவிக்கப்பட்டுள்ளார். சுகன்யா திருப்பூர் கிழக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளராக பொறுப்பில் இருக்கிறார். இவர் கோவை சட்டக் கல்லூரியில் எம்.ஏ.பி.எல். முடித்து விட்டு தாராபுரம் மற்றும் கோவையில் வழக்கறிஞராக பணியாற்றி வருகிறார். கடந்த 6 ஆண்டுகளுக்கும் மேலாக திமுகவில் பொறுப்பு வகித்து வருகிறார். கட்சியில் சேர்ந்ததும் முதலில் அவருக்கு மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் பொறுப்பு வழங்கப்பட்டது. கட்சி செயல்களில் சிறப்பாக ஈடுபட்டு வந்ததாலும், சுறுசுறுப்பாக பணியாற்றி வந்ததாலும் தற்போது மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. சுகன்யாவின் மணிவாசகம். இவர் திமுக ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் இவரது மனைவி சுகன்யா. இவர்களுக்கு அக்ஷயா (6) என்ற ஒரு மகள் உள்ளார்.

சுகன்யாவின் கணவரின் குடும்பம் திமுக பாரம்பரியத்தை சேர்ந்த குடும்பமாகும். மணிவாசகத்தின் தந்தை சவுந்தரராஜன். இவர் திமுக முன்னாள் ஊராட்சி தலைவர் ஆவார். திமுகவில் பல ஆண்டுகளாக இருந்து வருகிறார். இவரது மனைவியான துர்கேஸ்வரி மேற்கு ஒன்றிய திமுக நிர்வாகி. இவர் கடந்த 10 ஆண்டுகளாக 2 முறை தாராபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் கவுன்சிலராக மக்கள் பணியாற்றியுள்ளார். பாரம்பரிய திமுக குடும்பத்தை சேர்ந்த மணிவாசகம் கடந்த 2 சட்டமன்ற தேர்தலிலும் தாராபுரம் தொகுதியில் போட்டியிட தனது சார்பிலும், தனது மனைவி சார்பிலும் விருப்ப மனு கொடுத்துள்ளார். ஆனால், வாய்ப்பு வழங்கப்படவில்லை. ஆனால், தற்போது சற்றும் எதிர்பாராத நிலையில் திமுக தலைமை வாய்ப்பு வழங்கி உள்ளது. பாரம்பரிய திமுக குடும்பத்தை சேர்ந்தவர்கள் என்பதாலும், தொகுதியில் செல்வாக்கு மிகுந்தவர்கள் என்பதாலும், எளிமையான பின்புலம் கொண்டவர்கள் என்பதாலும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக திமுக நிர்வாகிகள் பலரும் கூறுகின்றனர்.

திமுக வேட்பாளராக அறிவிக்கப்பட்ட சுகன்யாவின் கணவர் மணிவாசகம் செய்தியாளர்களிடம் கூறுகையில், "திருப்பூர் கிழக்கு மாவட்டத்தில் தாராபுரம் தனி சட்டமன்ற தொகுதியின் திமுக வேட்பாளராக கழகத்தின் தலைவர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார். எங்கள் குடும்பம் கடந்த 20 ஆண்டு காலமாக திமுகவிற்காக பணியாற்றியுள்ளோம். எங்களுக்கு கிடைத்துள்ள இந்த பொன்னான வாய்ப்பை அனைத்து திமுக நிர்வாகிகள் அடிமட்ட தொண்டர்கள் அனைவருடனும் இணைந்து சுகன்யாவின் வெற்றிக்காக கடுமையாக உழைத்து வெற்றியை தலைவருக்கு காணிக்கையாக படைப்போம்" என்றார்.



சகிக்க முடியாத காட்சி நடக்கிறது

வெற்றிக்கனியை தலைவரின் காலடியில் சமர்ப்பிப்பேன்

திமுக வேட்பாளர் சுகன்யா நேற்று செய்தியாளரிடம் கூறுகையில், "தமிழ்நாட்டு மக்களை நம்பி தலைவர் மு.க.ஸ்டாலின் இருக்கிறார். அவரை நம்பி நான் திமுக சார்பில் போட்டியிட்டு வெற்றிக்கனியை தலைவரின் காலடியில் சமர்ப்பிப்பேன். இதில், எந்த மாறுபட்ட கருத்துக்கும் 100 சதவீதம் இடமில்லை, தாராபுரம் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் சுகன்யா தான் என்பது முடிவு செய்யப்பட்ட ஒன்று" என்றார். தற்போதைய தவெக ஆட்சியில் நடைபெற்று வரும் சட்டமன்ற கூட்டத்தொடர் பற்றி உங்கள் கருத்து என்ன? என்று செய்தியாளர்கள் கேட்டபோது, நடப்பதும் நடந்து கொண்டிருப்பதும் சட்டமன்றம் தானா?, ஆட்சியா? நடக்கிறது. சகிக்க முடியாத காட்சி தான் நடக்கிறது என்றார்.



தாராபுரம் இடைத்தேர்தலில் தேர்தல் மன்னன் வேட்பு மனு

256வது முறையாக தாக்கல்

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் தனி சட்டமன்ற தொகுதிக்கான இடைத்தேர்தல் அக்.6ம் தேதி நடைபெறுகிறது. இதனை முன்னிட்டு நேற்று (9ம் தேதி) வேட்பு மனு தாக்கல் தொடங்கியது. முதல் நாளான நேற்று சேலம் மாவட்டம் மேட்டூரை சேர்ந்த 'தேர்தல் மன்னன்' கே.பத்மராஜன், 256 முறையாக தனது வேட்பு மனுவை கோட்டாட்சியர் அலுவலகத்தில் தொகுதி தேர்தல் அலுவலரும், கோட்டாட்சியருமான பெலிக்ஸ் ராஜாவிடம் தாக்கல் செய்தார். இது குறித்து தேர்தல் மன்னன் பத்மராஜன் செய்தியாளர்களிடம் கூறுகையில், 'தாராபுரம் தொகுதி தனி தொகுதி என்பதால் எனது வேட்பு மனு நிராகரிக்கப்படுவதில் சந்தேகம் இல்லை. இருப்பினும் தாராபுரம் தொகுதியில் வேட்பாளருக்காக வேட்பு மனு தாக்கல் செய்தேன் என்ற அரசு ஆவண பதிவு இருந்தால் எனக்கு போதுமானது' என்றார்

முதல்வர் விஜய் ஒருவாரம் லண்டன் சுற்றுப்பயணம்

ஆதவ் அர்ஜுனாவும் செல்கிறார்

சென்னை, செப்.10: தமிழக சட்டப் பேரவை கூட்டம் முடிந்துள்ளதை யொட்டி, முதல்வர் விஜய் ஒருவார சுற்றுப்பயணமாக இன்று லண்டன் செல்கிறார்.

தமிழக முதல்வர் விஜய் இன்று இரவு 10.05 மணிக்கு, எமிரேட்ஸ் ஏர்லைன்ஸ் பயணிகள் விமானத்தில் சென்னையில் இருந்து துபாய் வழியாக லண்டன் புறப்பட்டு செல்கிறார். லண்டனில் சில தினங்கள் தங்கி இருக்கும் முதல்வர் விஜய், ஐரோப்பிய நாடுகளின் தொழிலதிபர்களை சந்தித்து பேச இருப்பதாக கூறப்படுகிறது. அப்போது தொழிலதிபர்களிடம், இந்தியாவில் தமிழ்நாட்டுக்கு வந்து, புதிய தொழில்கள் தொடங்கும்படியும், தமிழ்நாட்டில் அதிக அளவில் தொழில் முதலீடுகளை செய்யும்படியும், கேட்டுக் கொள்வார் என்று கூறப்படுகிறது.

பின்னர், முதல்வர் விஜய், தனது லண்டன் பயணத்தை முடித்துக் கொண்டு வருகிற 16ம் தேதி லண்டனில் இருந்து புறப்பட்டு துபாய் வழியாக, எமிரேட்ஸ் ஏர்லைன்ஸ் பயணிகள் விமானத்தில் 17ம் காலை 8.05 மணிக்கு சென்னை வந்து சேர்கிறார்.



தமிழக முதல்வராக பொறுப்பேற்ற பின்பு, முதல்வர் விஜய் முதல்முறையாக, சென்னையில் இருந்து பயணிகள் விமானத்தில் வெளிநாட்டிற்கு செல்வதையடுத்து, சென்னை விமான நிலையத்தில் அதற்கான ஏற்பாடுகள் செய்வதில் அதிகாரிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

இன்று காலை 11 மணிக்கு, முதல்வர் லண்டன் பயண ஏற்பாடுகள் பாதுகாப்புகள் குறித்து சென்னை பழைய விமான நிலையத்தில் ஏ.எஸ்.எல் மீட்டிங் எனப்படும் சிறப்பு ஆலோசனை கூட்டம் நடக்கிறது என்று கூறப்படுகிறது.

அதோடு தொழில் துறை மற்றும் நிதி துறையை சேர்ந்த அதிகாரிகள் ஒரு சிலர் லண்டன் செல்வார்கள் என்றும், அவர்கள் முதல்வருக்கு முன்னதாகவே லண்டன் செல்வதற்கு வாய்ப்பு இருப்பதாகவும் கூறப்படுகிறது. தொழில்துறை அமைச்சர் கீர்த்தனா, லண்டன் செல்லவில்லை. ஆனால் விளையாட்டுத்துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா, நேற்று லண்டன் புறப்பட்டுச் சென்றார். விளையாட்டு தொடர்பான சில தொழில் அதிபர்களை சந்திக்க இருப்பதாகவும் கூறப்படுகிறது.

சென்னையில் நடந்த தொழில் துறை மாநாட்டில் பத்திரிகையாளர்கள் அனுமதிக்கப்படாமல் ரகசியமாக நடந்ததுபோல, லண்டன் கூட்டமும் எந்த அறிவிப்பும் இல்லாமல் ரகசிய கூட்டமாக நடைபெறும் என்றும், அரசு சார்பில் பின்னர் அறிக்கைகள் வெளியிடப்படும் என்றும் தகவல்கள் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

முதல்வர் விஜய் இன்று வெளிநாட்டு பயணம் எதிரொலி

தாய்மாமன் தங்க மோதிரம் திட்டம் செப். 15ல் தொடங்க வாய்ப்பு இல்லை

அமைச்சர் அருண்ராஜ் தகவல்

சென்னை, செப்.10: முதல்வர் விஜய் இன்று வெளிநாட்டு பயணம் எதிரொலியாக தாய்மாமன் தங்க மோதிரம் திட்டம் செப்டம்பர் 15ம் தேதி தொடங்க வாய்ப்பு இல்லை என்று அமைச்சர் அருண்ராஜ் கூறினார்.

அரசு மருத்துவமனைகளில் குழந்தைகள் பிறப்பை அதிகரிக்கும் நோக்கத்தில், கடந்த ஜூன் மாதம் 23ம் தேதி தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்தை முதல்வர் விஜய் அறிவித்தார். மேலும், இந்த திட்டம் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15ம் தேதி தொடங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். இந்த திட்டத்தின் மூலம் பயன் பெற கடந்த ஜூன் மாதம் 22ம் தேதி முதல் அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் குழந்தைகள் தகுதி பெற்றவர்கள் ஆவார்கள். இந்த குழந்தைகளுக்கு 22 கேரட் தங்கத்தில் செய்யப்பட்ட ஒரு கிராம் தங்க மோதிரம் தாய்மாமன் சீராக வழங்கப்படும். இதற்காக, பட்ஜெட்டில் அடுத்த ஓராண்டுக்கு ரூ.755 கோடியே 83 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 4 லட்சத்து 41 ஆயிரத்து 667 தங்க மோதிரத்திற்கும் ஆர்டர் கொடுக்கப்பட்டுள்ளது. தங்க மோதிரம் செய்து கொடுக்கும் ஒப்பந்தத்தை ஜாய் ஆலுக்காஸ் நிறுவனம் 70 சதவீதம் அளவுக்கும், கல்யாண் ஜூவல்லரி நிறுவனம் 30 சதவீதம் அளவுக்கும் பெற்றுள்ளன. தாய்மாமன் தங்க மோதிரம் திட்டம் தொடங்குவதற்கு 5 நாட்களே இடைவெளி உள்ள நிலையில், குறிப்பிட்ட நாளில் (செப்டம்பர் 15) திட்டத்தை தொடங்க வாய்ப்பு இல்லை என்று தகவல்கள் வெளியாகியுள்ளது.

அதற்கு முதல்வர் விஜய்யின் லண்டன் பயணம் காரணமாக கூறப்படுகிறது. தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக நாளை (10ம் தேதி) லண்டனுக்கு புறப்படும் அவர், சென்னையில் இருந்து துபாய் சென்று, அங்கிருந்து லண்டன் போய் சேருகிறார். லண்டன் பயணத்தின்போது, சில்வர்ஸ்டோனில் நடைபெறும் நடிகர் அஜித்குமாரின் கார் பந்தயத்தையும் முதல்வர் விஜய் கண்டுகளிக்க இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்த பயணம் 16ம் தேதி வரை 7 நாட்கள் நீடிக்கும் என்றும் கூறப்படுகிறது.



அப்படி பார்த்தால், முதல்வர் விஜய், 16ம் தேதி இரவு தான் லண்டனில் இருந்து சென்னை திரும்பும் நிலை உள்ளது. நிலைமை அவ்வாறு இருக்கும்போது, அதற்கு முந்தைய நாளான (செப்டம்பர் 15) அண்ணா பிறந்த நாளில் தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்தை அவர் தொடங்கிவைக்க சாத்தியம் இல்லை.

இந்த நிலையில், மதுரை மாவட்டம் உசிலம்பட்டியில் உள்ள அரசு மருத்துவமனையில் செப்டம்பர் 25ம் தேதி (வெள்ளிக்கிழமை) தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்தை முதல்வர் விஜய் தொடங்கிவைப்பார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளது. உசிலம்பட்டி பகுதியில் தாய்மாமன் சீர் வழங்கும் பழக்கம் பிரபலம் என்பதால், குறிப்பிட்ட ஊர் தேர்வு செய்யப்பட்டதாக தெரிகிறது.

முன்னதாக, செப்டம்பர் 17ம் தேதி (லண்டனில் இருந்து திரும்பிய அடுத்த நாள்) விருதுநகரில், மறைந்த முன்னாள் முதல்வர் காமராஜர் பிறந்த நாளில், அவர் படித்த பள்ளியில், காமராஜர் காலை உணவுத் திட்ட விரிவாக்கத்தை முதல்வர் விஜய் தொடங்கி வைக்க இருக்கிறார். அதே நாளில், மதுரை மீனாட்சியம்மன் கோயில் கும்பாபிஷேகமும் நடைபெற இருப்பதால், முதலில் கும்பாபிஷேக நிகழ்ச்சியில் கலந்துகொண்டுவிட்டு, அதன்பிறகு காலை உணவு திட்டத்தை தொடங்கிவைக்க முதல்வர் விஜய் செல்வார் என்றும் கூறப்படுகிறது.

இது குறித்து சென்னையில் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் அருண்ராஜ் நேற்று கூறியதாவது: தாய்மாமன் தங்க மோதிரம் திட்டம் வரும் 15ம் தேதி தொடங்கப்படும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. முதல்வரின் வெளிநாட்டு பயணம் காரணமாக தாய் மாமன் தங்க மோதிரம் திட்டம் தொடங்குவது தள்ளிப்போகிறது. ஏற்கனவே நிர்ணயித்த தேதியில் திட்டத்தை தொடங்க முடியவில்லை.

திட்டம் தொடங்கும் தேதி குறித்து அதிகாரப்பூர்வமாக பின்னர் அறிவிக்கப்படும். தாய் மாமன் தங்க மோதிரம் திட்டத்தில் வழங்கப்பட உள்ள தங்கத்தில் எவ்வித குறையும் இருக்காது. 916 தங்கம் தானா? என முறையாக சோதனை செய்த பின்னரே தங்க மோதிரம் திட்டத்திற்கு தங்கம் அனுப்பப்படும். தாய் மாமன் தங்க மோதிரம் திட்டத்தில் தரப்படும் மோதிரத்தையும் பயனாளர்கள் சோதனை செய்து கொள்ளலாம்.



பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமைச் செயலகம்... முதல் பக்க தொடர்ச்சி

அனைத்து அரசு துறைகளையும் ஒரே நிர்வாக வளாகத்தில் கொண்டுவந்து ஒருங்கிணைக்கப்படும்.

தீயணைப்பு வசதிகள், மாற்றுத்திறனாளிகள் சென்றுவர வசதிகள் மற்றும் பசுமைக் கட்டிட தர நிலைகளுக்கு உட்பட்டு நவீன நிர்வாக வளாகம் உருவாக்கப்படும். போதுமான வாகன நிறுத்துமிடங்கள், மாநாட்டு அரங்குகள், பொதுமக்கள் சேவை மையங்கள் மற்றும் அலுவலர்களுக்கான நவீன வசதிகள் ஏற்படுத்தப்படும்.

புனித ஜார்ஜ் கோட்டையின் பாரம்பரிய கட்டிடங்களை வரலாற்று மரபு சின்னங்களாக பாதுகாத்து, அவற்றின் பாரம்பரிய மதிப்பை வருங்கால தலைமுறைகளுக்கு அறியும் வகையில் உருவாக்கப்படும். இவற்றை கருத்தில் கொண்டு அடுத்த நூறாண்டுகளின் தேவையைப் பூர்த்திசெய்யும் வகையில், நவீன வசதிகளுடன்கூடிய சட்டமன்றம் மற்றும் தலைமைச் செயலகம் அடங்கிய புதிய கட்டிட வளாகம் சென்னையில் 20 லட்சம் சதுர அடி பரப்பளவில் ரூ.1,200 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்படும்'' என்று அறிவித்தார்.

புதிய தலைமை செயலகம் பட்டினப்பாக்கத்தில் தான் அமைக்க விஜய் தலைமையிலான தவெக அரசு முன்கூட்டியே திட்டமிட்டு இருந்தாலும், இதுபற்றி கடந்த வாரம் 110வது விதியின் கீழ் அறிவிப்பு வெளியிட்டபோதே, சட்டப்பேரவையில் எந்த இடத்தில் சட்டப்பேரவை வளாகம் அமைக்கப்படுகிறது என்று அறிவிக்கவில்லை. இது அனைவரிடமும் சந்தேகத்தை எழுப்பியது.

இந்நிலையில் பட்டினப்பாக்கத்தில் முதல்வர் விஜய் வீடு அருகே புதிய தலைமை செயலகம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளதாக அதிகாரப்பூர்வமற்ற தகவல் வெளியானது. இதற்கு அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, பாமக தலைவர் அன்புமணி, அமமுக பொதுச்செயலாளர் டி.டி.வி.தினகரன் ஆகியோர் எதிர்ப்பு தெரிவித்தனர்.

எடப்பாடி பழனிசாமி கூறும்போது, "புதிய தலைமை செயலகம் கட்டுவதற்கு ரூ.1,200 கோடி செலவு செய்யப்படும் என்ற அறிவிப்பு தேவையா?" என்று கேள்வி எழுப்பி இருந்தார். "பட்டினப்பாக்கம் போக்குவரத்து நிறைந்த இடம், நெருக்கடியான பகுதி.

அதனால் நகருக்கு வெளியே அனைத்து வசதிகளுடன் 500 முதல் 1000 ஏக்கர் பரப்பளவில் புதிய தலைமை செயலகத்துடன் ஒருங்கிணைந்த நிர்வாக நகரத்தை அமைக்க வேண்டும்'' என்று அன்புமணி தெரிவித்து உள்ளார். "எவருடனும் ஆலோசனை நடத்தாமல் அவசர கதியில் அறிவிக்கப்பட்ட புதிய தலைமை செயலகத்தை திட்டத்தை கைவிட வேண்டும்'' என்று டிடிவி.தினகரன் தெரிவித்து உள்ளார்.

அதேபோன்று பட்டினப்பாக்கம் பகுதியில் உள்ள 9 மீனவ கிராம மக்களும் தங்கள் வாழ்வாதாரம் பறிக்கப்படும் என்று கூறி கடும் எதிர்ப்பு தெரிவித்ததுடன், உள்ளூர் மீனவர்கள் பொதுநல அமைப்புகளுடன் இணைந்து போராட்டம் நடத்துவோம் என்று மீனவ சங்க தலைவர்கள் எச்சரித்துள்ளனர். இவ்வளவு எதிர்ப்புகள் வந்தும், அதை தவெக அரசு கண்டுகொள்ளாமல் நேற்று அதிரடியாக ஒரு அரசாணையை வெளியிட்டுள்ளது. அதில் கூறி இருப்பதாவது:

தமிழக சட்டப்பேரவையில் கடந்த 3ம் தேதி முதல்வர் வெளியிட்ட அறிவிப்பின் அடிப்படையில், புதிய சட்டப்பேரவை வளாகம் அமைப்பதற்காக பட்டினப்பாக்கம் (மயிலாப்பூர் அருகில்) மொத்தம் 25.55 ஏக்கர் நிலம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்த வளாகம் நவீன வசதிகளுடன் கூடிய சட்டமன்றம் மற்றும் தலைமை செயலம் அடங்கிய புதிய கட்டிட வளாகம் சென்னையில் 20 லட்சம் சதுர அடி பரப்பளவில் ரூ.1,200 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.

புதிய கட்டிடத்துக்காக அடையாளம் காணப்பட்ட நிலங்களில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்துக்கு சொந்தமான நிலங்கள், சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான நிலம் மற்றும் வருவாய்த் துறை மற்றும் வீட்டு வசதி வாரியத்துக்கு சொந்தமான நிலங்கள் இடம்பெற்றுள்ளன. நிலம் தொடர்பான உரிமை மற்றும் ஆக்கிரமிப்பு விவரங்களை முழுமையாக ஆய்வு செய்த பின்னர், தேவையான முன் அனுமதிகளை பெற்று கட்டுமான பணிகளை தொடங்க அரசு திட்டமிட்டுள்ளது.

மேலும், புதிய சட்டப் பேரவை மற்றும் தலைமைச் செயலக கட்டிடத்துக்கான விரிவான திட்ட அறிக்கையை, மதிப்பீடுகளுடன் தயாரித்து மூன்று மாதங்களுக்குள் அரசிடம் சமர்ப்பிக்க பொதுப்பணித் துறைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இதற்காக, கட்டிட கலையமைப்பு ஆலோசனை நிறுவனத்தை தேர்வு செய்யும் பணி, கட்டிடத்தின் ஆரம்ப நிலை வரைபடங்கள் மற்றும் வடிவமைப்புகளை இறுதி செய்யும் பணி, இறுதி கட்ட வரைபடங்கள் மற்றும் வடிவமைப்புகளை தயாரிக்கும் பணி ஆகியவற்றுக்கென தனித் தனி குழுக்கள் அமைக்கவும் உத்தரவிட்டுள்ளது. இவ்வாறு அரசாணையில் கூறப்பட்டுள்ளது.

GRIHUM HOUSING FINANCE

க்ரிஹம் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்

பதிவு பெற்ற அலுவலகம்: 6 ஆவது தளம், B பில்டிங், கங்கா ட்ரினோ, லோஹேகான், புனே, மகாராஷ்டிரா-411014. கிளை அலுவலகம்: எண் 1510, 2வது தளம், ஸ்ரீ காம்ப்ளக்ஸ், திருச்சி சாலை, கோயம்புத்தூர், தமிழ்நாடு-641018

மின்-ஏலம்- விற்பனை அறிவிப்பு
சர்ஃபாசி சட்டத்தின் கீழ் கடனீட்டு அசையா சொத்து விற்பனை

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (சட்டம்) மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 (விதிகள்) விதி 8&9 கீழ் அசையா சொத்துகளின் மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு. இங்கே உள்ள அறிவிப்பின்மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்கள்/ உப-கடன்தாரர்கள்/ அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டுச் சொத்துகளானது க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் அதிகாரப்பூர்வ அதிகாரியால், பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 பிரிவு 13 (12) இன் படியும், கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டத்தின் பிரிவு 13(2) மற்றும் விதிகள் 8 &9 இன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி சுவாதீனம் செய்துள்ளார். கடனீட்டு சொத்துகள் அவை எங்கே உள்ளதோ, என்ன உள்ளதோ, எப்படி உள்ளதோ, அதே அடிப்படையில் மின் ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும். இதன் மூலம் பொது மக்களுக்குத் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், மின்- ஏல இயங்குதளத்தில் அதன் இணையதள லிங்கில் அதாவது, https://www.bankeauctions.com மூலமாக 13.10.2026 தேதியன்று மின்-ஏலம் நடைபெறும். விற்பனையின் விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்/கடனீட்டு கடனீந்தோரின் இணையதளம் அதாவது, www.grihumhousing.com– ஐ பார்வையிடவும்.

வ. எண்.	முன்மொழிவு எண். வாடிக்கையாளர் பெயர் (A)	கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் நிலுவைத்தொகை (B)	சுவாதீன தன்மை (C)	சொத்தின் விவரம் (D)	நிர்ணய விலை (E)	முன்வைப்புத் தொகை ((நிர்ணய விலையில் 10%)(F)	முன்வைப்புத் தொகை செலுத்தும் தேதி (G)	ஏல உயர்வுத் தொகை (H)	சொத்தை பார்வையிடும் தேதி மற்றும் நேரம் (I)	ஏலத் தேதி மற்றும் நேரம் (J)	தெரிந்த வில்லங்கங்கள் / நீதிமன்ற வழக்குகள் தெரிந்தது ஏதேனும் (K)
3	கடன் எண் LAP052 3200000005052935 மகேஸ்வரி காளியப்பன் அவருடைய கணவர் மறைந்த உய்க்கட்டனின் சட்டப்பூர்வ வாரிசு, (கடன்தாரர்),பண்டாரம் யாதவ் அவருடைய தந்தை மறைந்த உய்க்கட்டனின் சட்டப்பூர்வ வாரிசு (உப கடன்தாரர்)	அறிவிப்பு தேதி: 08.08.2025 08.08.2025 தேதியின்படி ரூ.1139333/– (ரூபாய் பதினொரு லட்சத்து முப்பத்தொன்பதாயிரத்து முந்நூற்று முப்பத்து மூன்று மட்டும்) மற்றும் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தும் காலம் வரையிலான ஆண்டொன்றுக்கு 15.85% வட்டி கூடுதலாக	கையக	பாளையங்கோட்டை பதிவு மாவட்டம், பாளையங்கோட்டை இணை 1 துணை பதிவு அலுவலகம், சிவந்திபட்டி கிராமம், அயன் புஞ்சை சர்வே எண்.1032/2 இல் 36 சென்ட்கள் மற்றும் அயன் புஞ்சை சர்வே எண்.1032/3 இல் உள்ள 41 சென்ட்கள், அயன் புஞ்சை சர்வே எண்.1033 இல் உள்ள 2 ஏக்கர்கள் 61 சென்ட்கள் பரப்பளவு உள்ள நிலங்கள் வீட்டு மனைகளாக பிரிக்கப்பட்டுள்ளது. அதில் அயன் புஞ்சை சர்வே எண்கள். 1032/2, 1032/3a இல் உள்ள மனை எண்.12 இன் பரப்பளவு 2022.125 ச.அடி அல்லது 5.05 சென்ட்களாகும். எல்லைகள்: வடக்கு: கிழக்கு மேற்கு பொதுப் பாதை, கிழக்கு: மனை எண்.11, தெற்கு: கிழக்கு மேற்கு பொது சாலை, மேற்கு: மனை எண்.13.	Rs. 1506676.00/- (ரூபாய் பதினைந்து லட்சத்து அறுபத்தாறாயிரத்து எழுபது ஆறு மட்டும்)	Rs. 150667.60/- (ரூபாய் ஒரு லட்சத்து ஐம்பதாயிரத்து அறுநூறு அறுபத்தேழு மற்றும் பைசா அறுபது மட்டும்)	12-10-2026 Before 5 PM	10,000/-	07-10-2026 (11AM – 4PM)	13-10-2026 (11 AM- 2PM)	எதுவுமில்லை

ஆர்வமுள்ள ஏலதாரர்கள்/கொள்முதலாளர்கள் ஏலப்புள்ளி சமர்ப்பிப்பதற்கு முன்பாக ஏலச்சொத்துகள் தொடர்பான விவரங்கள் மற்றும் கூடுதல் கட்டணங்கள், வில்லங்கங்கள், மூன்றாம் நபர் கோரிக்கைகள் போன்ற சொத்து தொடர்பான விவரங்களை தெரிந்து கொள்ள அருகில் உள்ள கடனீட்டு கடனீந்தோர் கிளைக்குச் சென்றோ அல்லது தாங்களாகவே எல்லா அம்சங்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டு தெரிந்து கொண்டு திருப்தியுற வேண்டும். சொத்து தொடர்பான சொத்து வரி, மின்சாரம்/தண்ணீர் ஆகியவற்றுக்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள் மற்றும் பிற கட்டணங்கள் உட்பட எந்தவிதமான செலவுகளையும் வெற்றிகரமான ஏலதாரரே ஏற்க வேண்டும்.ஆர்வமுள்ள ஏலதாரர்கள் மின்-ஏலத்துக்கு தேவையான பயனாளர் அடையாள முகவரி, கடவுச் சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் C1 இந்தியா பிரைவேட் லிமிடெட், முகவரி: மனை எண்.68, 3 ஆவது தளம், கூர்கயான், ஹரியானா–122003, உதவி எண்: 7291981124,25,26 உதவும் மின்னஞ்சல் முகவரி: Support@bankeauctions.com மூலமாகவோ, தொடர்பு நபர்: தாரணி P, மின்னஞ்சல் முகவரி: dharani.p@c1india.com, தொடர்பு எண்.9948182222 மூலமாகவோ தொடர்பு கொண்டு அவர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை சுயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாக பதிவேற்றம் செய்ய வேண்டும். மின்–ஏல செயல்பாடு மீதான ஆன்லைன் பயிற்சியை அவர்களிடம் இருந்தே பெற வேண்டும். ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ ஏலதாரர்கள் அவர்களுடைய ஏல முன்வைப்புத் தொகையை (EMD) NEFT/RTGS/DD மூலமாக க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் ஆக்சன் புரஸீட்ஸ் A/C, ICICI BANK LTD, கணக்கு எண்.091551000028 மற்றும் IFSC Code– ICIC0000915, ஐசிஐசிஐ பேங்க் லிமிடெட், பான்ஞ்சசீல் டெக்னிகல் பார்க், கணபதி சௌக் அருகில், 43/44, விமன் நகர்–411014 என்ற கிளையில் செலுத்தத்தக்கவிதமாக ஏதேனும் தேசிய வங்கியிலோ அல்லது செட்யூல்டு வங்கியிலோ 12.10.2026 தேதி அன்றோ அதற்கு முன்னதாகவோ செலுத்த வேண்டும். மேலும் https://www.bankeauctions.com இணையதளம் வழியே தங்கள் லாக்இன் அடையாள முகவரி மற்றும் கடவுச்சொல் மூலம் இல் பெயரை முன்னதாகவே பதிவு செய்து கட்டணமில்லா மின்–ஏல பயிற்சி பெற பயனாளர் அடையாள முகவரி, கடவுச் சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை சுயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். அவற்றின் மூல பிரதியை கிளை முகவரி : 1510, 2வது தளம், ஸ்ரீ காம்ப்ளக்ஸ், திருச்சி சாலை, கோயம்புத்தூர், தமிழ்நாடு–641018 கைபேசி எண். +91 8281138143. மின்னஞ்சல் முகவரி p.adith@grihumhousing.com. தொடர்பு கொள்ள வேண்டும். மின்–ஏலத்தில் பங்கேற்பதற்கான விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள https://www.bankeauctions.com & www.grihumhousing.com– ஐ பார்வையிடவும்.

கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டம்-2002 இன் விதி 8(6) இன் கீழ் கடன்தாரர்/ உப - கடன்தாரர் / அடமானதாரர்கள்/ ஜாமீன்தாரர்களுக்கு வழங்கப்படும் இந்த அறிவிப்பானது 30 நாள்கள் அறிவிப்பு என்று கருதத் தக்கதாகும்.

உள்ளூர் மொழி வெளியீட்டில் அல்லது ஆங்கில செய்தித்தாள் வெளியீட்டில் உள்ளடக்கங்களில் ஏதேனும் வித்தியாசம் இருந்தால் பிசினஸ் ஸ்டாண்டர்டு ஆங்கில செய்திதாளில் வெளியிடப்பட்ட உள்ளடக்கமே ஏற்றுக் கொள்ளக் கூடியதாகும்.

நாள்: 10.06.2026, இடம்: தமிழ்நாடு

ஒம்/- அதிகாரப்பூர்வ அலுவலர், க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்